பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 19 புதன்கிழமை 07.12.2022 கதிர் 284

## மூத்த ஊடகவியலாளர் இரகுநாதன் காலமானார்



மூத்த ஊடகவியலாளர் பாலகிருஷ்ணன் இரகுநாதன் நேற்று தனது 70 ஆவது வயதில் காலமானார்.

யாழ்., வடமராட்சி,

8

# புதிதாக 12 அமைச்சர்கள் 'மொட்டு'வுக்கு வேண்டும்



## ரணிலிடம் மீண்டும் இடித்துரைப்பு பஸிலின் வருகையோடு நெருக்கடி

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் 12 பேரை அமைச்சர்களாக நியமிக்க வேண்டும் என்ற அக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் போராட்டம் இன்னும் ஓயவில்லை.

2

## ரணில் அரசை வீழ்த்த துணைபோகமாட்டேன்

### விக்கி திட்டவட்டம்



ரணில் அரசு வீழ்வதற்கு நான் ஒரு காரணமாக இருக்க மாட்டேன். வரவு – செலவுத் திட்டத்தை எதிர்க்கமாட்டேன்.

–இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற

2

## உள்ளகப் பொறிமுறையிலேயே தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வு

### பிரதமர் தினேஷ் கூறுகின்றார்



இலங்கை ஓர் இறைமையுள்ள ஜனநாயக நாடு. தமிழர்களின் பிரச்சினைக்கு உள்நாட்டில் பகிரங்கமாகப் பேசித்தான் தீர்வைக் காண முடியும். சர்வதேச மூலம் தீர்வைப் பெறலாம் என்ற மனநிலையில் இருந்து தமிழ்க் கட்சிகள் மாற வேண்டும்.

– இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

8

## கொழும்பில் குடும்பஸ்தர் ஒருவர் கொடூரமாகத் தாக்கிப் படுகொலை

கொழும்பில் குடும்பஸ்தர் ஒருவர் கொடூரமாகத் தாக்கிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மாளிகாவத்தை – ஜயந்த வீரசேகர மாவத்தைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

குறித்த நபர் இரும்புக் குழாய்களால் தாக்கிக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலில் படுகாயமடைந்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அதற்கு முன்னதாகவே அவர் உயிரிழந்துள்ளார்.

8

## தந்தை திட்டியதால் மகன் உயிர்மாய்ப்பு

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி, நெச்சிமுனை பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவன் ஒருவர் வீட்டில் தூக்கில்தொங்கிதற்கொலைக்கு முயன்ற நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கல்லடி, நெச்சிமுனையைச் சேர்ந்த பிரபல வைத்தியர் ஒருவரின் மகனான அகிலன் துஷ்யந்தன் (வயது 18) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

8

### போதைப்பொருளுக்கு முடிவு கட்ட

## வடக்குப் பாடசாலைகளில் இனிமேல் திடீர் சோதனை



போதைப்பொருளைக் கட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்கள் என்பவற்றில் இனிவரும் நாட்களில் திடீர் சோதனைகள் முன்னெடுக்கப் படவுள்ளன.

8

## எம்.பி. பதவியை இழக்கும் இரண்டு பெண் சிங்கங்கள்?



இரட்டைப் பிரஜாவுரிமை விவகாரத்தால் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் எம்.பி. பதவியை இழக்கக்கூடும் என்று அரசியல் வட்டாரத்தில் பேசப்படுகின்றது.

அவர்களில் ஒருவர் இராஜாங்க அமைச்சர்

8




## ஆட்சி அதிகாரம் இல்லாமல் சேவை செய்து காட்டுங்கள்!

### அரச தரப்பினருக்குச் சஜித் சவால்

முடிந்தால் ஆட்சி அதிகாரம் இல்லாமல் மக்களுக்குச் சேவை செய்து காட்டுங்கள் என்று அரச தரப்பில் உள்ளவர்களுக்குச் சவால் விடுக்கின்றேன்.

2

## ஐஸ்ஸுடன் ஒருவர் கைது



கொழும்பில் இன்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கொழும்பு

2

## இரு தேர்தல்களையும் ஒன்றாக நடத்துங்கள்

### எதிரணி வலியுறுத்து

2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் இரண்டையும் ஒரே நேரத்தில் நடத்துமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர் டி சில்வா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இரண்டு தேர்தல்களையும் ஒன்றாக நடத்துவதன் மூலம் கோடிக்கான ரூபா பணத்தை மீதப்படுத்த முடியும்

8

## ஆட்சி அதிகாரம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

–இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் வேலைத்திட்டத்தின் கீழ் 42 ஆவது கட்டமாக 46 இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை பஸ் நேற்று தெரணியகல சிறி சமன் கல்லூரிக்கு நன்கொடையாகவழங்கிவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பிரபஞ்சம், மூச்சு போன்ற வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் போது சஜித் பிரேமதாஸவுக்குப் பொருட்கள் பகிர்ந்தளிக்க மட்டுமே தெரியும் என்றும், அதற்கு மேல் எதுவும் தெரியாது என்றும் அரசில் உள்ள ஒரு பிரிவினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

எவ்வாறாயினும், இலங்கையின் 74 வருட அரசியல் வரலாற்றில் எதிர்க்கட்சி ஆற்றிய பாரம்பரிய வகிபாகத்துக்கு அப்பால் தற்போதைய எதிர்க்கட்சி வேறுபட்ட வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

கல்வி சார்ந்த அணுகலில் பாரபட்சம் நிலவக்கூடாது. எனவே, கிண்டல் செய்யும் அரச தரப்பினருக்கு ஆட்சி அதிகாரம் இன்றி சேவை செய்து காட்டுமாறு சவால்விடுக்கின்றேன். 42 பஸ்களையும் பரோபகாரிகளின் உதவியுடன் வழங்கியுள்ளோம். அவற் றுக்கு அரச நிதி எதுவும் பயன்படுத் தப்படவில்லை.

நாட்டின் உயிர்நாடியாகக் கருதப்படும் சிறுவர் தலைமுறையை அறிவு, திறமை மற்றும் வசதிகளுடன் பூரணப்படுத்துவது தார்மீகப் பொறுப்பாகும். அதற்கான நிலையான நோக்கை முன்நோக்காகக் கொண்டு சக்வல (பிரபஞ்சம்) வேலைத்திட்டத்தின் கீழ் 42 ஆவது கட்டமாக 46 இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை சேவை பஸ்ஸை வழங்குகின்றோம் – என்றார்.

## புதிதாக......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'மொட்டு'வின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்சவின் வருகையைத் தொடர்ந்து – அவர் அருகில் இருக்கும் தைரியத்தில் மீண்டும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கடி கொடுக்கத் தொடங்கியுள்ளனர் பஸில் தரப்பினர்.

வரவு – செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு நாளை மாலை இடம்பெறுகின்றது. அது முடிந்த கையோடு அமைச்சரவை நியமனம் இடம்பெறும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பஸில் தரப்புக்கு வாக்குறுதி வழங்கியுள்ளார். ஆனால், அது தொடர்பானதாக இல்லை என்று பஸில் தரப்பு குற்றம் சுமத்துகின்றது.

ஜனாதிபதி அவர் வழங்கிய வாக்குறுதியை மீறி எமது காலைவாருவதற்கு முயற்சி செய்கின்றார் என்று பஸில் தரப்பு எம்.பிக்கள் புலம்புகின்றனர்.

பஸில் ராஜபக்ச அமெரிக்காவில் இருந்து திரும்பியவுடன் இந்த விடயம் பற்றி அவர் ஜனாதிபதி ரணிலுடன் பேசினார். வரவு – செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் அமைச்சரவை நியமனம் இடம்பெறும் என்று ரணில் கூறினார். அதேவேளை, நீங்கள் தந்த அந்த 12 பேருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்க முடியாது என்று ரணில் மீண்டும் பஸிலுக்கு நினைவுபடுத்தினார்.

அதாவது அந்தப் பட்டியலில் இருக்கின்ற நாமல் ராஜபக்ச, ரோஹித அபேகுணவர்தன, மஹிந்தானந்த அளுத்கமகே, ஜோன்சன் பெர்னாண்டோ ஆகிய நால்வருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படமாட்டாது என்று பஸில் அமெரிக்காவில் இருக்கும் போதே ஜனாதிபதி பல தடவைகள் பஸிலிடம் கூறி இருந்தார். அதற்கான காரணத்தையும் விளக்கி இருந்தார். அதையே மீண்டும் நினைவுபடுத்தினார்.

இல்லை, முன்னாள் அமைச்சர்களான அவர்கள் நால்வருக்கும் மீண்டும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று ஆரம்பத்தில் பிடிவாதமாக நின்ற பஸில் இப்போது அமைதியாகிவிட்டார். எப்படியோ அமைச்சர்களை நியமித்தால் போதும் என்ற நிலைப்பாட்டில்தான் அவரும் இருக்கின்றார் என்றே தெரிகின்றது.

இருந்தும், அந்த நால்வர் போக ஏனையவர்களைக்கூட நியமிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை என்று பஸில் தரப்பு தெரிவிக்கின்றது. இதனால் அவர்கள் இந்த நியமனத்தை விரைவுபடுத்தக் கோரி ரணிலுக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் அவர்கள் ஆளுநர்கள் – அமைச்சர்கள் நியமனத்தை விரைவுபடுத்துமாறு ஜனாதிபதியைக் கோரியுள்ளனர்.

புதிய ஆளுநர்கள் நியமனமும் அமைச்சர்கள் நியமனம் போல் இழுபறியிலேயே உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் மூவரை ஆளுநராக நியமிக்க வேண்டும் என்ற ஜனாதிபதியின் நிலைப்பாடு காரணமாகவே ஆளுநர்களின் நியமனமும் இழுபறியில் உள்ளது என்று அறியமுடிகின்றது.

இருப்பினும், இந்த இரண்டு விவகாரம் தொடர்பிலும் வரவு – செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு முடிந்ததும் ஜனாதிபதி ரணில் உரிய நடவடிக்கை எடுப்பார் என்று ஜனாதிபதி வட்டாரம் தெரிவிக்கின்றது.

## ரணில் அரசை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

நாளை (08) வரவு – செலவுத் திட்டத்தின் வாக்கெடுப்பில் கஜேந்திரகுமாரின் கட்சி தவிர்ந்த மற்றைய தமிழ்க் கட்சிகளுடன் பேசியே முடிவு எடுப்பேன். எப்படியும் பாதீட்டை எதிர்க்க மாட்டேன்.

இந்த அரசு வீழ்வதற்கு நான் ஒரு காரணமாக இருக்க மாட்டேன். ஏனெனில், இந்த அரசை விட்டால் அடுத்து வரும் அரசு இதனிலும் பார்க்கக் கேவலமான அரசாக இருக்கக்கூடும் என்று நான் எண்ணுகின்றேன். அவ்வாறான ஒரு நிலைமை ஏற்பட்டால் நாட்டின் நிலைமை இன்னும் சீர்கெடும். தற்போது இருக்கும் ரணிலைத் தொடர்ந்து இருக்கச் செய்து பொருளாதார ரீதியாக சில நன்மைகளைப் பெற்றுக்கொள்ள அவருடன் சேர்ந்து செல்ல வேண்டிய அவசியமும் எங்களுக்கு இருக்கின்றது.

நாங்கள் எதிர்பார்க்கும் எல்லாவற்றையும் சிங்கள அரசுகளிடமிருந்து எடுக்கமுடியாது. அதற்காக அவர்களுக்கு எதிராக இருந்து கொண்டும் அவர்களிடம் இருந்துஎதனையும்பெற்றுக்கொள்ளவும் முடியாது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று உண்மையாகவே நினைத்தால், ஒற்றையாட்சிக்குப் புறம்பான ஓர் ஆட்சி முறையை எவ்வாறு நாங்கள் பேசி ஒரு முடிவுக்கு வரலாம் என்பதை அவர்கள் (அரசு) முன்வைத்தால்தான் அவ்வாறான பேச்சுக்களுக்கு நாங்கள் செல்ல முடியும் –என்றார்.

## ஐஸ்ஸுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் ஒத்துழைப்புடன் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பன்னிப்பிட்டிய – அருவ்வல பகுதியைச் சேர்ந்த நபரே சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் 25 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேற்கொண்டுவருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பரவும் பேராபத்து

**போதைப் பொருள் பாவனையின் திடீர் அதிகரிப்பு தொடர்பாக வெளியாகும் செய்திகள் பேரதிர்ச்சி தருவனவாக இருக்கின்றன.**

**பெற்றோர்கள் போதைப் பொருள் பாவனைக்கு உள்ளாகி சீரழிந்தமையால், அவர்களின் 12 ஆயிரம் பிள்ளைகள் அனாதை விடுதிகளிலும் காப்பகங்களிலும் கைவிடப்பட்டிருக்கின்றார்கள் என்ற அதிர்ச்சிப் புள்ளி விவரத்தை கொழும்பு லேடி ரிட்ஜ்வே ஆஸ்பத்திரியின் குழந்தை வைத்திய ஆலோசகர் டாக்டர் தீபல் பெரேரா வெளியிட்டு இருக்கின்றார்.**

**இப்படிப் பெற்றோரால் கைவிடப்பட்ட சிறார்கள் போதிய பாதுகாப்பின்மையால் வேறு பலாத்கார சீரழிவுகளுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் ஆஸ்பத்திரிகளுக்கு கூட்டி வரப்படுகின்றனர். அவர்களை வைத்தியசாலைக்குக் கூட்டி வரக்கூட வேறு ஆள்கள் இல்லை. பல சமயங்களிலும் மிக வயதான பேரன், பேத்திதான் இவ்வாறு பாதிக்கப்பட்ட சிறுவர், சிறுமியரை வைத்தியக் கவனிப்புக்குக் கூட்டி வருகின்றனர் என்றார் அவர்.**

**பாடசாலைச் சிறுவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனையாவது – அவர்களை இலக்கு வைத்துச் சீரழிப்பது – பயங்கரவாதத்தை விட மிக மோசமான செயற்பாடு. அந்தப் போக்குக்கு எதிராக 'அறகலையா' (போராட்டம்) பட்டி தொட்டிகள் எங்கும் – கிராமங்கள் உள்ளடங்கலாக – முன்னெடுக்கப்பட வேண்டிய அவசர நிலைமை ஏற்பட்டு இருப்பதாக அவர் சுட்டுகின்றார்.**

**போதைப் பொருள் வர்த்தகர்கள் அதற்கு இலகுவில் அடிமைகளாகி விடக் கூடிய பாடசாலை சிறார்களையே பெரும்பாலும் இலக்கு வைக்கின்றனர்.**

**ஐஸ் ரக போதைப் பொருளின் ஒரு தடவை பாவனையே அதை பாவித்தவரை அடிமையாக்கி விடும் என்றும் அவர் உறுதிபடக் கூறுகிறார்.**

**இத்தகைய போதைப் பொருள்களுக்கு பாடசாலைச் சிறார்கள் அடிமையாவது குறித்து முன்னர் நாங்கள் அறிந்திருக்கவில்லை. இப்போது நிலைமை தலைகீழ். பாடசாலை மாணவர்கள் மட்டுமல்லர், மாணவியரும் கூட இந்த வேண்டாத வினைக்கு அடிமையாகிவிடும் அவலம் நேர்ந்திருப்பதாக அவர் விசனம் தெரிவிக்கின்றார்.**

**கிராமப்புற பாடசாலைகளும் இந்தப் போதை வஸ்து பாவனைக்குள் சிக்கிக் கொண்டிருப்பது அதிர்ச்சி தரும் உண்மை.**

**போதைப் பொருள் பாவனைக்கு எதிராக அரசும் பொலிஸாரும், பாதுகாப்புத் தரப்பினரும், அதிகாரிகளும் பொங்கி எழுந்து பிரயோசனமில்லை. அதையும் தாண்டி, முழு சமூகமுமே – நாடுமே –பொங்கி எழ வேண்டும். தவறுவோமேயானால் –இதே வேகத்தில் பாவனை பரவி விஸ்தீரணமடையுமானால் – எங்கள் நாட்டுக்கு அடுத்த தலைமுறை என்று ஒன்று இல்லாமல் போகும் என விசனிக்கின்றார் அவர்.**

**போதைப் பொருள் பாவனையாளர்கள – அதில் அடிமையானவர்களை – மருத்துவ ரீதியில் கையாளும் அதே சமயம், போதைப் பொருள் விற்பனையாளர்கள், விநியோகஸ்தர்களை சட்டம் மிக இறுக்கமாக – காட்டமாக – தயவு தாட்சண்யம் காட்டாமல் கையாள வேண்டும் என்ற டாக்டர் தீபல் பெரேராவின் கோரிக்கை கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதாகும்**

# நிதி மோசடி குற்றம்சாட்டப்பட்ட ஜானகி ஒரு வழக்கில் இருந்து விடுதலையானார்!

நிதி மோசடி சம்பவம் தொடர்பில் தற்போது விளக்கமறியலில் உள்ள ஜானகி சிறிவர்தனவுக்கு ஒரு வழக்கில் பிணை வழங்கப்பட்டுள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) கோட்டை நீதிவான் திலின கமகே முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனினும் மேலும் 3 வழக்குகளில் ஜானகி சிறிவர்தனவை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# பளை பிரதேசத்திலுள்ள ஆலயங்களில் தொடர்ச்சியாகத் திருட்டுச்சம்பவங்கள்!

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தம்பகாமம் மற்றும் புலோப்பளை பகுதிகளில் உள்ள இருவேறு ஆலயங்களில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

பளை பிரதேசத்தில் தொடர்ச்சியாக திருட்டுச்சம்பவங்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் அதிகளவில் ஆலயங்களிலேயே திருட்டுச்சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பளை பிரதேசத்தில் கடந்த தினங்களில் கச்சார் வெளிபிள்ளையார் ஆலயம் ஒன்றிலும் திருட்டுச்சம்பவம் பதிவாகியது. இதனையடுத்து நேற்று (செவ்வாய்க்கிழமை) பளை தம்பகாம நெலியாய் ஆலயம் மற்றும் புலோப்பளை வைரவர் ஆலயம் என்பனவற்றில் திருட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தத் திருட்டுச்சம்பவத்தில் தம்பகாம நெலியாய் ஆலயத்தில் சிலைகள் உடைக்கப்பட்டு சிலையின் கீழ் வைக்கப்பட்டிருக்கும் ஐம்பொன் மற்றும் தகடு அம்மனின் நகை என்பன திருடப்பட்டுள்ளன.

மற்றைய ஆலயத்தில் பணம் திருடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க விடயமாகும். சம்பவம் தொடர்பாக பளை பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டில் பெண்களுக்கான சுகாதார உரிமைகளை உறுதி செய்யக்கோரி கிளிநொச்சியில் போராட்டம்!




பெண்களுக்கான சுகாதார உரிமைகளை உறுதி செய்யக்கோரி வடக்கு கிழக்கு பெண்கள் ஒன்றியத்தால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி போராட்டம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 10 மணியளவில் கிளிநொச்சி வைத்தியசாலை முன்பாக ஆரம்பமானது.

வடக்கு கிழக்கு பெண்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் மக்கள் கலந்துகொண்டனர்.

மாவட்ட வைத்தியசாலைக்கு செல்லும் மக்களுக்கான சுகாதார வசதிகள் குறைவு காணப்படுவது தொடர்பிலும், சிலமருத்துப்பொருள்களை வெளியில் பெற்றுக்கொள்ளப் பணிப்பது தொடர்பில் அதிருப்தி வெளியிட்டும், சுகாதார உரிமைகளை உறுதி செய்யக்கோரியுமே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற திருக்கார்த்திகை உற்சவம்!






யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் திருக்கார்த்திகை உற்சவம் மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) மாலை கார்த்திகை நட்சத்திரத்துடன் கூடிய குமராலய தீபத் திருநாளான வசந்தமண்டப பூஜை நடைபெற்றது.

இதன்போது வள்ளி, தேவசேனா சமேதரராக கைலாச வாகனத்தில் முத்துக்குமார சுவாமி எழுந்தருளி,ஆலய முன்றிலில் சொக்கப்பனை கொளுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து நல்லூர் முருக பெருமான் வெளிவீதியுலா வந்து பக்தர்களுக்கு காட்சியளித்திருந்தார்.

# ஆப்கானில் அரச ஊழியரை இலக்கு வைத்து வெடிகுண்டுத் தாக்குதல்: 7 பேர் உயிரிழப்பு!





காபூல், டிச.07

ஆப்கானிஸ்தானின் வடக்கு பால்க் மாகாணத்தில் உள்ள மசார்–இ–ரிப் நகரில் நேற்று அரசு ஊழியர்களை குறிவைத்துப் பயங்கர வெடிகுண்டு தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது. பெட்ரோலிய இயக்குனரகத்தின் ஊழியர்கள் பலர் பஸ்ஸில் தங்களின் அலுவலகத்துக்கு சென்று கொண்டிருந்தனர். அவர்கள் செல்லும் பாதையில் பயங்கரவாதிகள் வெடிகுண்டுகள் நிரப்பிய வாகனம் ஒன்றை நிறுத்தி வைத்திருந்ததுடன், அந்த வாகனம் இருந்த பகுதிக்கு பஸ் வந்தபோது பயங்கரவாதிகள் அதில் இருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச்செய்துள்ளனர்.

அதில் அந்த பகுதியே அதிர்ந்தது. அங்கு கரும் புகை மண்டலம் உருவானது. குண்டு வெடிப்பில் அரசு ஊழியர்கள் சென்ற வாகனம் உள்பட பல வாகனங்கள் தீக்கிரையாகின. மேலும் அந்த பகுதியில் இருந்த பல கடைகள் சின்னபின்னமாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பயங்கரக் குண்டு வெடிப்பில் அரசு ஊழியர்கள் உள்பட 7 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தனர். மேலும் 6 பேர் பலத்த காயம் அடைந்தனர். அவர்கள் உடனடியாகப் மீட்கப்பட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டனர்.

இந்தக் குண்டுத் தாக்குதலுக்கு உடனடியாக யாரும் பொறுப்பேற்கவில்லை. எனினும் ஐ.எஸ். பயங்கரவாதிகளே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கக்கூடும் என நம்பப்படுகிறது. முன்னதாக கடந்த மாத இறுதியில் மசார்–இ–ரிப் நகரில் உள்ள ஒரு மதப்பள்ளிக்கூடத்தில் நடத்தப்பட்ட தற்கொலைப்படை தாக்குதலில் 19 பேர் பலியானதும், 24 பேர் படுகாயம் அடைந்ததும் குறிப்பிடத்தக்கது

## பாடசாலை அருகே கத்திக்குத்து ஜேர்மனியில் சிறுமி உயிரிழப்பு!





பெர்லின், டிச.07

ஜேர்மனியின் தெற்குப் பகுதியில் உள்ள இல்லர்கிர்ச்பெர்க் நகரில் பாடசாலைக்கு வழக்கம் போல் மாணவ, மாணவிகள் வந்து கொண்டிருந்தனர். அப்போது அங்கு கையில் கத்தியுடன் வந்த மர்ம நபர் ஒருவர் பள்ளிக்கூடத்துக்கு அருகே நடந்து சென்று கொண்டிருந்த 2 மாணவிகளைக் கத்தியால் சரமாரியாகம் குத்தினார். இதனால் அங்கு பெரும் பதற்றம் உருவானது.

மாணவ, மாணவிகள் அலறியடித்தபடி நாலாபுறமும் சிதறி ஓடினர். அதைத் தொடர்ந்து தாக்குதல் நடத்திய அந்த மர்ம நபர் அங்கிருந்து தப்பி ஓடினார்.

கத்திக்குத்துத் தாக்குதலில் படுகாயம் அடைந்து இரத்த வெள்ளத்தில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த 14 மற்றும் 13 வயதான 2 சிறுமிகளையும் அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர். அவர்களில் 14 வயது சிறுமி சிகிச்சை பலனின்றி பரிதாபமாக

உயிரிழந்தார் எனக் கூறப்படுகின்றது..

மற்றொரு சிறுமிக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்ற நிலையில், கத்திக் குத்துத் தாக்குதலைத் தொடர்ந்து பொலிஸார் அந்தப் பகுதியில் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது அங்கு ஒரு கட்டடத்தில் இரத்தக்கறை படிந்த கத்தியுடன் பதுங்கியிருந்த 27 வயது வாலிபரை பொலிஸார் கைது செய்தனர். முதற்கட்ட விசாரணையில் அவர் எரித்திரியா நாட்டில் இருந்து ஜேர்மனிக்கு அகதியாக வந்தவர் என்பது தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் குறித்துப் பொலிஸார் அவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## கொலம்பியா நெடுஞ்சாலையில் திடீர் நிலச்சரிவில் 33பேர் சாவு



பொகோடா, டிச.07

தென்மமெரிக்க நாடான கொலம்பியாவின் ரிசரால்டா மாகாணத்தில் மலைப்பாங்கான பகுதியில் அமைந்துள்ள பெரேரா–கிப்டோ என்கிற நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் மதியம் வழக்கம் போல் வாகனங்கள் சென்று கொண்டிருந்தபோது அங்கு திடீரனெ பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் சாலையில் சென்று கொண்டிருந்த ஒரு பஸ், ஒரு கார் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள் ஆகிய வாகனங்கள் மண்ணோடு மண்ணாக புதைந்தன.

நிலச்சரிவு குறித்த தகவல் கிடைத்ததும் பொலிஸார்,இராணுவ வீரர்கள் மற்றும் பேரிடர் மீட்புக் குழுவினர் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தீவிர மீட்பு பணியில் ஈடுபட்டனர். ஆனால் பல மணி நேர போராட்டத்துக்கு பின்னர் 33 பேர் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் 3 சிறுவர்களும் அடங்குவர். 9 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 4 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதே போல் நிலச்சரிவில் இன்னும் சிலர் சிக்கியிருக்கலாம் எனக் கூறப்படுகின் றமையால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாய்களைத் திருட துப்பாக்கியால் சுட்டவருக்கு 21 ஆண்டுகள் சிறை



வாஷிங்டன், டிச.07

அமெரிக்காவை சேர்ந்த பிரபல பாப் பாடகி லேடி காகா என்பவர் 'பிரெஞ்சு புல்டாக்' இனத்தை சேர்ந்த 3 நாய்களை வளர்த்து வருகிறார். இந்த நாய்களை பராமரிக்கும் பணியை ரியான் பிர் என்பவர் செய்து வந்த நிலையில் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் ரியான் பிர், லேடி காகாவின் 3 நாய்களையும் நடைபயிற்சிக்கு அழைத்து சென்றார். அப்போது அங்கு வந்த மர்ம நபர்கள் 4 பேர் அந்த நாய்களை திருட முயன்றனர்.

இதை ரியான் பிர் தடுக்க முயன்றார். அப்போது அந்த 4 பேரில் ஒருவர் அவரை துப்பாக்கியால் சுட்டார். இதில் அவர் சுருண்டு விழுந்ததும் அந்த மர்ம நபர்கள் 2 நாய்களை திருடி சென்றனர்.

மற்றொரு நாய் அவர்களிடம் சிக்காமல் தப்பி ஓடிவிட்டது. பின்னர் அந்த நாயை பொலிஸார் மீட்டு லேடி காகாவிடம் ஒப்படைத்தனர். அதேபோல்திருடப்பட்ட 2நாய்களை பற்றி தகவல் தெரிவிப்போருக்கு 5 லட்சம் அமெரிக்க டொலர் (இந்தியப் பணத்தில் சுமார் ரூ.4.12 கோடி) சன்மானம் வழங்கப்படும் என லேடி காகா அறிவித்த நிலையில் திருடுபோன 2 நாள்களுக்குப் பிறகு அந்த இரு நாய்களும் அவரிடம் வந்து சேர்ந்தன.

இதனிடையே நாய்களைத் திருட அதன் பராமரிப்பாளரைத் துப்பாக்கியால் சுட்டார் என

ஜேம்ஸ் ஹோவர்ட் ஜாக்சன் என்பவரைப் பொலிஸார் கைது செய்த நிலையில், கலிபோர்னியா நீதிமன்றில் விசாரணை நடந்து வந்தது. இந்த நிலையில் இந்த வழக்கில் ஜேம்சுக்கு 21 ஆண்டு கள் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

# திருவண்ணாமலை சென்று திரும்பியவர்கள் விபத்தில் சிக்கியதில் ஆறுபேர் உயிரிழப்பு!



சென்னை, டிச.07

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே லொறி மீது சிறிய ரக டாட்டா வாகனம் மோதி ஏற்பட்ட விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர். செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே சென்னை–திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் இந்த வாகனம் சென்னையைநோக்கிசென்றுகொண்டிருந் தது. அதில் 6 பேர் பயணம் செய்து கொண்டிருந்தனர். மதுராந்தகம் அடுத்த ஜானகிபுரம் என்ற இடத்தில் வந்த போது முன்னால் சென்ற கண்டெய்னர் லொறி மீது அந்த வாகனம் மோதியது.

அப்போது பின்னால் வந்த கனரக வாகனம், இந்த சிறிய வாகனம் மீது மோதியது. இதில் இரண்டு வாகனங்க ளுக்கும் இடையே சிக்கி டாட்டா வாகனம் சுக்கு நூறானதில் அதில் பயணித்த 6 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த னர். விபத்து குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்குவந்த பொலிஸார்உயிரிழந்தவர் களின் உடல்களை மீட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

உயிரிழந்த 6 பேரும் திருவண்ணம லை தீப திருவிழாவிற்கு சென்று விட்டு வீடு திரும்பி

கொண்டிருந்தனர் என்பது முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

## நவம்பர் மாதத்தில் 7.587 கோடி தொன்னாக இந்தியாவின் நிலக்கரி உற்பத்தி அதிகரிப்பு




புதுடெல்லி,டிச.07

நவம்பர் மாதத்தில் இந்தியாவின் மொத்த நிலக்கரி உற்பத்தி 7.587 கோடி தொன்னாக அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு 6.794 கோடி தொன்னாக இருந்த நிலக்கரி உற்பத்தி இந்த ஆண்டு 11.66 சதவீதம் அதிகரித்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நிலக்கரி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நவம்பரில் இந்திய நிலக்கரி நிறுவனத்தின் உற்பத்தி 12.82 சதவீதம் அதிகரித்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சிங்கரேணி காலியரீஸ் நிறுவனம் மற்றும் பிற கேப்டிவ் சுரங்கங்களின் உற்பத்தி முறையே 7.84 சதவீதம் மற்றும் 6.87 சதவீதம் அதிகரித்துள்ளதுடன்!37 சுரங்கங்களில் 24 சுரங்கங்கள் 100 சதவீதத்திற்கும் அதிகமாக உற்பத்தி செய்துள்ளன. மேலும் ஐந்து சுரங்கங்கள் 80 முதல் 100 சதவீதம் வரை உற்பத்தி செய் துள்ளன. கடந்த ஆண்டு நவம்பரில் 6.020 கோடி தொன்களாக இருந்த மின் பயன்பாடுகள் இந்த நவம்பரில் 3.55 சதவீதம் அதி கரித்து 6.234 கோடி தொன்களாக உள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## ராஜஸ்தானில் அசுத்தமான தண்ணீரைக் குடித்து 80க்கும் மேற்பட்டோர் பாதிப்பு, சிறுவன் மரணம்


ஜெய்ப்பூர், டிச.07

ராஜஸ்தானின் கரவுலி மாவட் டத்தில் அசுத்தமான தண்ணீரை குடித்ததால்80க்கும்மேற்பட்டோர் உடல்நலம் பாதிக்கப்பட்டுள் ளனர் என்றும் 12 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளான் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

டிசம்பர் 3ஆம் திகதி முதல் படபடா, கசைபடா, ரகஞ்ச் மற்றும் பயானியா உள்ளிட்ட பகுதிக ளைச் சேர்ந்த 86 பேர் அசுத்தம ான தண்ணீரை குடித்ததால்ப் வாந்தி மற்றும் வயிற்றுப்போக் கால் பாதிக்கப்பட்டு மாவட்ட ருத்துவமனையின் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து முதன்மை தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் புஷ்பேந்திர குப்தா கூறும் போது, செவ்வாய்க்கிழமை மாலை வரை மொத்தம் 86 பேர் மருத்துவமனையில் அனுமதி க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 54 பேர் சிகிச்சைகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். 32 பேர் சிகிச்சை பெற்று வருகின் றனர்.

மேலும் குழந்தைகள் விடுதி யில் 48 குழந்தைகள் அனும திக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 26 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். 22 பேர் சிகிச்சையில்உள்ளனர். திங்கட்கிழமை இரவு வாந்தி மற் றும் வயிற்றுப்போக்கால் பாதி க்கப்பட்ட ரகஞ்சில் வசிக்கும் 12 வயது சிறுவன், செவ்வாய்க் கிழமை காலை மருத்துவம னைக்குச் வந்த போது உயிரிழந் தார் என்று கூறியுள்ளார்.



## டெல்லி மாநகராட்சி வாக்கு எண்ணிக்கை ஆரம்பம்; ஆம் ஆத்மி கட்சி முன்னிலையில்




புதுடெல்லி, டிச.07

டெல்லி மாநகராட்சிக்கு கடந்த 4 ஆம் திகதி வாக்குப் பதிவு நடைபெற்றது. டெல்லியில் வடக்கு, தெற்கு, கிழக்கு என 3 ஆக இருந்த மாநகராட்சி ஒன்றா இணைக்கப்பட்டு தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்த லில் ஆம் ஆத்மி, பா.ஜ.க. ம ற்றும் காங்கிரஸ் இடையே மும்முனைப் போட்டி நிலவு கிறது.

டெல்லி மாநகராட்சி தேர்த லில் மொத்தமுள்ள 250 வட்டாரங்களுக்கும் சேர்ந்து 50 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன என தேர்தல் ஆணையம் அதிகாரப்பூர்வ அறிவித்துள்ளது. டெல்லி மாநகராட்சி தேர்தலில் இன்று வாக்கு எண்ணிக்கை நடைபெற்று முடிவுகள் அறி விக்கப்படுகின்றன.

இந்த நிலையில், டெல்லி மாநகராட்சி தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை தொடங்கி, 42 வாக்கு எண்ணும் மையங்களில் நடைபெற்று வருகிறது. இந்த பணியை 68 கண்காணிப்பாளர்கள் கண்காணித்து வருகின்றனர். கடந்த 15 ஆண்டுக ளாக டெல்லி மாநகராட்சி பா.ஜ.க. வசம் இருந்தது.

இந்நிலையில் இன்று நடைபெற்று வரும் வாக்கு எண்ணிக்கையில் காலை 10 மணி நிலவரப்படி ஆம் ஆத்மி 129 வட்டாரங்களில் முன்னிலையில் உள்ளதுடன் பா.ஜ.க. 106 வட்டாரங்களிலும், காங்கிரஸ் 10 வட்டாரங்களிலும் முன்னிலை வகிக்கின்றன என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

## சீனாவின் ‘யுவான் வாங்-5’ கப்பல் இந்திய எல்லைக்குள் நுழைந்தது



புதுடெல்லி, டிச.07

இந்திய பெருங்கடல் பகுதியில் தனது ஆதிக் கத்தை விரிவுப்படுத்த சீனா முயன்று வருகின்ற நிலையில், சீனாவின் இந்த ஆக்கிரமிப்பு நடவ டிக்கைக்கு எதிராக பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகளுடன் இந்தியா தனது இராணுவ உறவு களை பலப்படுத்தி வருகிறது. ஆனாலும் சீனா இராணுவ மற்றும் ஆராய்ச்சி கப்பல்கள் அவ்வப் போது இந்திய பெருங்கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்து வருகின்றன.

கடந்த சில நாள்களுக்கு முன் பத்திரிகையாளர்க ளுக்கு பேட்டி அளித்த இந்தியக் கடற்படை தளபதி ஹரி குமார் இந்திய பெருங்கடல் பகுதியில் சீன கப்பல்களின் நடமாட்டம் பெருகி வருவதாகவும், அவற்றை உன்னிப்பாகக் கவனித்து வருவதாக வும் கூறியிருந்தார்.

இந்த நிலையில் சீனாவின் ‘யுவான் வாங்-5’ என்கிற உளவு கப்பல் இந்திய பெருங்கடல் பகுதி க்குள் நுழைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. ஏவுகணை மற்றும் செயற்கைக்கோள் கண்காணிப்பு கப்பலான ‘யுவான் வாங்-5’ கப்பல் கடைசியாக இந்தோனேசியாவின் சுந்தா ஜலசந்தி யில் காணப்பட்டதாகவும், தற்போது அந்த கப்பல் இந்திய பெருங்கடல் பகுதிக்குள் நுழைந்துவிட்ட தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியா இன்னும் சில தினங்களில் நீண்ட தூரம் சென்று தாக்கும் அதிநவீன ஏவுகணையை வங்காள விரிகுடாவில் இருந்து ஏவி சோதனை செய்ய திட்டமிட்டுள்ள நிலையில், சீனாவின் உளவு கப்பல் இந்திய பெருங்கடல் பகுதியில் நுழைந்தி ருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கின்றது.

மேலும், சீனாவின் இந்த உளவு கப்பல் கடந்த ஆவணி மாதம் இந்தியாவின் கடும் எதிர்ப்பையும் மீறி இலங்கையின் அம்பாந்தோட்டை துறை முகத்தில் ஒரு வார காலம் நிறுத்திவைக்கப்பட் டிருந்தது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# பெரும் நெருக்கடியில் இயங்கும் காரைதீவு அரச வைத்தியசாலை



(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு பிரதேச வைத்தியசாலை பெரும் மருந்துத் தட்டுப்பாட்டுடன் நெருக்கடியில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. மின்வெட்டு நேரங்களில் வைத்தியசாலை கும்மிருட்டில் மூழ்கிறது.

சிறுபிள்ளைகளுக்கான பனடோல் சிறப் தொடக்கம் வயது வந்தவர்களுக்கான இரத்த அழுத்தம் , நீரிழிவு வருத்தம் என்பவற்றிற்கான மருந்துகள் எதுவுமின்றி இயங்கிக்கொண்டிருக்கின் றது.

இதுதொடர்பாக வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் நடராஜா அருந்திரனிடம் வினவியபோது, நாட்டு நிலமை காரணமாக மருந்துதட்டுப்பாடு நிலவுவதாகவும் பொதுவாக எல்லா வைத்தியசாலைகளிலும் இப்பிரச்சினை காணப்படுவதாகவும் கூறினார்.

மேலும் தமது நிர்வாகம் பெருமுயற்சி செய்து பெற்றுக்கொள்ளக்கூடிய அனைத்து வழிகளில் மருந்துகளை பெற்றுக்கொண்டிருப்பதாகவும் ஆனால் அது போதாமல் உள்ளதாகவும் தெரிவித்தார்.

மக்கள் நிதி நெருக்கடியில் சிக்கித் தவிப்பதால் நோய்களை குணப்படுத்த அரச வைத்தியசாலைகளையே நம்பியுள்ளனர்.

அந்தவகையில் இந்த மருந்து தட்டுப்பாட்டு நிலமை ஏழை மக்களை பெரிதும் பாதித்துள்ளது. வரும் காலங்களில் நிலைமை இன்னும் மோசமடையலாம்.

மேலும் தற்போது நாட்டில் 2 மணித்தியாலயம் 20 நிமிடங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது. இவ்வேளையில் வைத்தியசாலை இருளில் மூழ்கிக் காணப்படுவதுடன் இவ்வேளையில் நோயாளர்களுக்கான அவசர சிகிச்சைகளையும் வழங்கமுடியாமல் திணறி வருகின்றனர்.

ஜெனறேற்றர் இருந்தும் எரிபொருள் வழங்கப்படாமையால் இந்நிலமை கடந்த மூன்று மாதங்களாக காணப்படுவதாக வைத்தியர் ந. அருந்திரன் தெரிவிக்கின்றார். மின்சாரம் இல்லாத வேளையில் ரோர்ச் லைட் மற்றும் செல்போன் வெளிச்சத்தில் தாதியர்கள் சேவையாற்றுவதை அவதானிக்க முடிகின்றது.

தற்போதைய நிலையில் ஒரு நாளைக்கு 5 லீற்றர் எரிபொருள் வீதம் மாதம் 150 லீற்றர் எரிபொருள் தேவைப்படுவதாக அறியக்கிடைக்கின்றது. சகோதர இனப் பிரதேசங்களின் வைத்தியசாலைகளில் பொது அமைப்பினரும், தனவந்தர்களும் எரிபொருள், மருந்து பிரச்சினைகளை பொறுப்பெடுத்து நிவர்த்தி செய்த. வருகின்றனர் எனவும் அறியக்கிடைக்கின்றது.

எனவே நாட்டு நிலமை சரியாகும்வரை இவற்றிற்கு இடைக்கால தீர்வொன்று அவசியமாகவுள்ளது.

இது தொடர்பாக ஆராய்வதற்காக நாளை 8 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7 மணியளவில் கூட்டமொன்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

# தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீட ஆய்வரங்கு







நூருல் ஹுதா உமர்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை,கலாசார பீடத்தின் 11 ஆவது சர்வதேச ஆய்வரங்கு நேற்று அப்பீடத்தின் கேட்போர் கூடத்தில் சிறந்த பங்காளிகளுடன் இணைந்து நிலைபேறான அபிவிருத்திக்கான தற்கால நெருக்கடிகளை முகாமை செய்தல் எனும் தொனிப்பொருளில் இடம்பெற்றது.

கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் தலைமையில் இடம்பெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். இந்நிகழ்வின் வரவேற்புரையினை ஆய்வரங்கின் இணைப்பாளர் எம்.எல். பௌசுல் அமீர் நிகழ்த்தினார். தலைமை உரையினை பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் வழங்கினார். இந்நிகழ்வின் பிரதம அதிதி தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் உரையாற்றினார்.

உபவேந்தர் தனது உரையில் சமகால இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகளை வெற்றிகொள்வதற்கு வழிவிடுவதாக ஆய்வுகள் அமைய வேண்டும் என்பதுடன் அதில் சமூக அறிவியல் மற்றும் மனிதப்பண்பியல் துறையின் முக்கியத்துவத்தினை சிலாகித்துப் பேசினார். அத்துடன் அத்துறை தொடர்பான ஆய்வுகள் மேலும் விரிபுடுத்தப்பட வேண்டியதன் அவசியத்தினையும் எடுத்துக்காட்டினார்.

அதனைத் தொடர்ந்து ஆய்வரங்கின் இணைச் செயலாளரும் புவியியல் துறைத் தலைவருமான கே. நிஜாமிர் முதன்மைப் பேச்சாளரை அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்வில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் புவியியல் துறைப் பேராசிரியரான சங்கைக்குரிய பேராசிரியர் பின்னவல சங்கசுமண தேரர் முதன்மைப் பேச்சாளராக சூம் தொழில்நுட்பத்தினூடாக கலந்து சிறப்பித்தார்.

சமகால உலக நெருக்கடிகள், இலங்கையின் நெருக்கடிகள் மற்றும் அவற்றை வெற்றிகொள்வதற்கான தந்திரோபாயங்கள் குறித்தும் உரையாற்றியமையுடன் இவற்றினை சமூக அறிவியல் மற்றும் மனிதப்பண்பியல் துறை ஆய்வுகள் எவ்வாறு கையாளுகின்றன? என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார்.

மேலும் கருத்துதெரிவிக்கையில் சமூக அறிவியல் மற்றும் மனிதப் பண்பியல் துறை ஏனைய துறைகளை ஊடறுத்துச் செல்லும் விதம் குறித்தும் சமூக அறிவியல் ஆய்வுப் பரப்பினை விஷ்தரிப்பதனூடாக சமகால நெருக்கடிகளை கையாளும் வழிவகைகள் குறித்தும் அவரது உரை கவனம் செலுத்தியது. நிகழ்வில் நன்றியுரையை ஆய்வரங்கின் இணைச்செயலாளர் ஐ.எல்.எம். ஸாஹிர் வழங்கினார். இந்நிகழ்வில் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், நூலகர், துறைத் தலைவர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், சிரேஷ்ட உதவி பதிவாளர், விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள், போதனைசாரா ஊழியர்கள், ஊடகவியலாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# விசேட தேவையுடையவர்களின் நலன்; திருமலையில் விசேட நடவடிக்கைகள்





(ஹஸ்பர)

விசேட தேவையுடையவர்களின் நலன்குறித்து மாவட்ட அடிப்படையில் பல நலன்புரி உதவிகளை சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பை பெற்று மேற்கொண்டு வருவதாகவும் அவர்களது தேவை குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என். ஜயவிக்ரம தெரிவித்தார்.

சர்வதேச விசேட தேவையுடையவர்கள் தினத்தை ஒட்டிய திருகோணமலை மாவட்ட பிரதான நிகழ்வு அரசாங்க அதிபர் தலைமையில் கடந்த சனிக்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றபோதே அவர் மேற்குறித்தவாறு தெரிவித்தார்.

இதன்போது விசேட தேவையுடையவர்களது கலை, கலாசார நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன. அத்துடன் 75 விசேட தேவையுடையோர் குடும்பங்களுக்கான உலர் உணவுப்பொதிகளும் அரசாங்க அதிபர் தலைமையிலான அதிகாரிகளால் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த உலர் உணவுப்பொருள்கள் வழங்குவதற்கான அனுசரனையை சிறுவர் அபிவிருத்தி நிதியம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ்,மேலதிக அரசாங்க அதிபர் ( காணி) எஸ்.சுதாகரன், பிரதம கணக்களார் எஸ்.பரமேஸ்வரன்,நிருவாக உத்தியோகத்தர் சனத் குருகுலசூரிய , சமூக சேவைகள் பிரிவு உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் வரவு – செலவுத் திட்டம் நிறைவேற்றம்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட வலி. தென்மேற்கு பிரதேசபை வரவு – செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நேற்று (செவ்வாய்க்கிழமை) மானிப்பாய் பிரதேச சபையின் தலைவர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை சபையில் சமர்ப்பித்தார்.

இதன்போது வரவு – செலவுத் திட்டம் மீது விவாதம் நடைபெற்றது, பின்னர் வாக்களிப்புக்கு விடப்பட்டது.

இதேவேளை 28 உறுப்பினர்களை கொண்ட மானிப்பாய் பிரதேச சபையில் நேற்று 23 உறுப்பினர்கள் மாத்திரம் வருகை தந்திருந்தனர்.

இதன்படி வரவு செலவு திட்டத்தை 23 உறுப்பினர்களும் ஏக மனதாக ஏற்றுக்கொண்டு நிறைவேற்றப்பட்டது.

# மருந்து பொருள்களைகோரி வவுனியாவிலும் போராட்டம்!




நாட்டில் மருந்துப் பொருள்களுக்கான தட்டுப்பாடு பாரிய அளவில் காணப்படுகின்றது.


நாட்டின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் பாரியளவில் கவன ஈர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அரச வைத்தியசாலைகளில் மருந்துப் பொருள்களுக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவுகின்றது. பெரும்பாலான வைத்தியசாலைகளில் மருந்துப்பொருள்கள் இன்மையால் தனியார் மருந்தகங்களில் நோயாளர்களை மருந்துகளைக் கொள்வனவு செய்யுமாறு அரச வைத்தியசாலைகளில் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், நேற்று (செவ்வாய்க்கிழமை) வவுனியாவில் மருந்து பொருள்கள் விலையேற்றத்தை கண்டித்து வடக்கு கிழக்கு பெண்கள் ஒன்றியத்தால் கவனவீர்ப்புப் போராட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வவுனியா குருமண்காடு சந்தியில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் இலங்கை அரசே அத்தியாவசிய மருந்து வகைகளும் மருத்துவ சாதனங்களும் மக்களுக்கு கிடைக்க உடனடியாக வழிவகை செய் என்ற பதாகையை போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

இந்தப் போராட்டம் சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்றது. இதேவேளை, நேற்று (செவ்வாய்க்கிழமை) யாழ். மாவட்டம் மற்றும் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை நிலாவெளி பிரதேசம் போன்றவற்றிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.செம்மணி வாயிலில் பிரதிஷ்டைசெய்யப்பட்ட சிவலிங்கப் பெருமானுக்கு எண்ணெய்க் காப்பு!



சிவபூமி அறக்கட்டளையினரால் யாழ்ப்பாணம் செம்மணி வாயிலில் ( ஏ – 9 வீதி) பிரதிஷ்டை செய்யப்பட்ட 7 அடி உயரமான சிவலிங்கப்பெருமானுக்கு எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது. அத்துடன் சிவலிங்கப் பெருமான் எழுந்தருளிய கோவிலுக்கு கலசம் வைக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலா நிதி ஆறு.திருமுருகன் மற்றும் மதகுருமார்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# பரதநாட்டிய கற்கைநெறிப் பரீட்சை



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு இந்து சமய கலாசாரக் கற்கைகள் நிறுவகம், சுவாமி விபுலானந்தர் பயிற்சி நிலைய ஏற்பாட்டில் காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் பரதநாட்டியம் அடிப்படைச்சான்றிதழ் கற்கைநெறி – 2022 பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான பரீட்சை இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

(படங்கள்: காரைதீவு சகா).

# வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை துர்க்காபுரத்தில் நடமாடும் சேவை!







வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தெல்லிப்பழை உப அலுவலகத்தினரால் தெல்லிப்பழை துர்க்காபுரம் கிராமசேவையாளர் பிரிவில் நடமாடும் சேவை நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை தோதரை அம்மன் ஆலய பிரதம குரு, வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், வட்டாரத்தில் வெற்றிபெற்ற உறுப்பினர் லயன் சி.ஹரிகரன், அந்த வட்டாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் இ.பூபதி, பிரதேசசபையின் செயலாளர் சுதர்சன், துர்க்காபுரம் கிராமசேவையாளர் இந்திரஜித் மற்றும் பிரதேசசபையின் தெல்லிப்பழை உப அலுவலகப் பொறுப்பதிகாரி, வருமான வரிப் பரிசோதகர், உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த நடமாடும் சேவையில் மக்களுக்கான வருமான வரி அறிவீடு, சைக்கிள்களுக்கான இலக்கத்தகடு விநியோகம் என பல்வேறு நலத்தி;ட்டங்கள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வலி.வடக்கு பிரதேசசபையின் 21 வட்டாரங்களிலும் தொடர்ச்சியாக நடமாடும் சேவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## எம்.பி பதவியை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கீதா குமாரசிங்க. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 'மொட்டு'க் கட்சியில் காலி மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். அவர் சுவிஸ்லாந்தின் பிரஜாவுரிமையை வைத்துள்ளார் என்று சொல்லப்படுகின்றது.

அடுத்தவர் டயனா கமகே. அவரும் இராஜாங்க அமைச்சர். ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் எம்.பி. அவர் அப்போது 'மொட்டு'ப் பக்கம் தாவி இருந்தார். அவர் பிரிட்டன் பிரஜாவுரிமையை வைத்துள்ளார் என்று சொல்லப்படுகின்றது.

இது தொடர்பில் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் இரட்டைப் பிரஜாவுரிமை உடையவர்கள் என்று நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால் எம்.பி. பதவியை இழப்பர்.

## எம்.பி பதவியை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மட்டக்களப்பில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் உயிரியல் துறையில் கல்வி கற்று வரும் குறித்த மாணவன் தனது வீட்டில் வளர்க்கும் நாயை அடித்ததால் அதனைக் கேட்டு அவரின் தந்தை திட்டினார் என்றும், அதையடுத்து மனமுடைந்த மாணவன் வீட்டில் யாரும் இல்லாத நிலையில் வீட்டின் மேல் மாடியில் உள்ள சமையலறையில் தூக்கிட்டுக் கொண்டார் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தூக்கில் இருந்து காப்பாற்றப்பட்ட மாணவன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸ் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் காத்தான்குடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வடக்குப் பாடசாலை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
– இவ்வாறு வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பனை மாணவர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது. அதனை இல்லாது ஒழிப்பதற்குப் பொலிஸார் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்கள் என்பவற்றில் மாணவர்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். இனிவரும் நாட்களில் திடீர் சோதனை நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவுள்ளோம்.

போதைப்பொருள் ஒழிப்பு என்பது தனியே பொலிஸாரின் கடமை மாத்திரம் அல்ல. பொலிஸாரால் மாத்திரம் அவற்றை இல்லாது ஒழிக்க முடியாது. மக்களின் பூரண ஆதரவு பொலிஸாருக்குக் கிடைக்க வேண்டும்.

குறிப்பாக மாணவர்களின் பெற்றோர்கள் மிக அவதானத்துடன் விழிப்பாக இருக்க வேண்டும். எதிர்காலத்தில் உங்கள் பிள்ளைகள் சமூக அந்தஸ்துடன் வாழ வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் உள்ள 61 பொலிஸ் நிலையங்களிலும் தினமும் போதைப்பொருளுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முற்படுத்தப்படுகின்றனர்.

வடக்கு மாகாணத்தில் பொலிஸார் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் மாத்திரம் ஈடுபடவில்லை. வீதிப் போக்குவரத்து விதி மீறல்களைக் கண்காணித்தல், சட்டம் – ஒழுங்கை நிலை நாட்டுதல் எனப் பல்வேறு செயற்றிட்டங்களில் ஈடுபட்டுள்ளனர் – என்றார்.

## மூத்த......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பருத்தித்துறை, ஆத்தியடியைச் சேர்ந்த இவர் தமிழ்ப் பத்திரிகைகள் பலவற்றில் பல ஆண்டுகள் பிரதேச ஊடகவியலாளராகப் பணியாற்றியிருந்த நிலையில், மூப்பின் காரணமாக பணியில் இருந்து ஓய்வெடுத்திருந்தார்.

பருத்தித்துறைக் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற இவர், சிறந்த சமூக சேவையாளராகத் திகழ்ந்தார்.

இவரது இறுதிக்கிரியைகள் புலோலி – சாரையடியில் நேற்று மாலை நடைபெற்றது.

இறுதி நிகழ்வில் கல்விச் சமூகத்தினர், ஊடகத்துறையினர் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

- விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

## கொழும்பில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாளிகாவத்தையைச் சேர்ந்த 44 வயதுடைய நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

நீண்ட நாட்களாக நிலவி வந்த தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும், அவரைக் கைதுசெய்வதற்காக மாளிகாவத்தைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## உள்ளகப்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வடக்கு, கிழக்கு உட்பட தேசிய ரீதியில் நிலவும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பேச்சு மூலம் விரைந்து தீர்வு காண வேண்டும் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார். எனவே, இதைக் கவனத்தில்கொண்டு அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் செயற்பட வேண்டும்.

சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று தமிழ்க் கட்சிகளிடம் மீளவும் கேட்டுக் கொள்கின்றேன் – என்றார்.

## இரு தேர்தல்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்றும், தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இப்படிச் செல்வதே சரியான முறை என்றும் அவர் கூறியுள்ளார். உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அவரிடம் கருத் துக் கேட்டபோதே இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

பெப்ரவரி மாதமளவில் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் வந்துவிடும். அதே நேரம் மார்ச் மாதம் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

தற்போதைய பொருளாதார நிலைமையின் கீழ் இரண்டு தேர்தல்களையும் ஒன்றாக நடத்தினால் செலவை மீதப்படுத்த முடியும்.

ஜனாதிபதி ஜனநாயகத் தலைவர் என்றால் – மக்கள் கூறுவதைக் கேட்பவர் என்றால் இரண்டு தேர்தல்களையும் ஒன்றாக நடத்த வேண்டும்.

மக்கள் இந்த ஆட்சியாளர்களைப் போகுமாறு கூறிவிட்டார்கள். இவர்கள் போவதாக இல்லை. பலவந்தமாக ஆட்சியில் இருக்கின்றார்கள்.

ஜனநாயகம் பேசுகின்ற – மனித உரிமைகள் பற்றிப் பேசுகின்ற ஒரு தலைவர் என்றால் இதற்கு இணங்க வேண்டும் –என்றார்







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.12.2022 இல் வெளியிடப்பெற்றது.